Registered as a News Paper in Sri Lanka பக்கங்கள் 04 விலை ரூபா: 4-00

# ஈழநாதம்

THE EELANAATHAM மக்கள் தினசரி Peoples Daily

நாதம் 01 மார்கழி (12 - 12 - 1990) புதன்கிழமை ஓசை 287

## விரும்பிய அனைவருக்கும் ஓய்வூதியம் இல்லை

(யாழ்ப்பாணம்)

சுயவிருப்பத்தின் அடிப்படையில் ஓய்வூதியம் பெறுவதற்காக விண்ணப்பித்த அரச திணைக்கள ஊழியர்கள் அனைவருக்கும் ஓய்வூதியம் வழங்கப்பட மாட்டாது. இந்த ஊழியர்களுக்கான ஓய்வூதியம் வழங்கும் இறுதி முடிவைத் திணைக்களங்கள்சார்ந்த அமைச்சும் அந்தந்த திணைக்களங்களுமே மேற்கொள்ளும். விண்ணப்பித்தவர்களின்சேவை அவசியம் தொடர்ந்தும் தேவை எனக் கருதும் பட்சத்தில் அவர்களின் (4ஆம் பக்கம் பார்க்க)

### திருக்கோணமலை முதலிக்குளத்திற்கும் பன்குளத்திற்கும் இடையில்

# புலிகள் - இராணுவம் மோதல்

# 5 படை பலி; நால்வர் படுகாயம்

## ஒரு சிப்பாயைக் காணவில்லை

(திருமலை)

முதலிக்குளத்திற்கும் (மொரவெவா) பன்குளத்திற்கும் இடையில் சிறிலங்கா இராணுவத்தினர்மீது விடுதலைப்புலிகள் மேற்கொண்ட தாக்குதலில் ஐந்து இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். பலர் காயமடைந்தனர். ஒரு சிப்பாயைக் காணவில்லை. பல ஆயுதங்கள் புலிகளால் கைப்பற்றப்பட்டன.

நேற்றுக்காலை 7.45 மணியளவில் இச்சம்பவம் இடம்பெற்றது. மொரவெவா இராணுவ முகாமில் இருந்து எழுநூறு யார் தூரத்தில் இருக்கும் பன்குளம் இராணுவ முகாமிற்கு நடந்து ரோந்து சென்ற இராணுவத்தினர் மீதே விடுதலைப் புலிகள் இத்தாக்குதலை மேற்கொண்டனர்.

இத்தாக்குதலில் ஐந்து இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். பலர் காயமடைந்தனர். காயமடைந்தவர்களும் ஏனைய இராணுவத்தினரும் அருகிலிருந்த மொரவெவா (4 ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியா நகருள் செல்ல மக்களுக்குத் தடை

(வவுனியா)

வவுனியாவில் அரசாங்கத்தால் அமுல்படுத்தப்பட்டிருந்த ஊரடங்குச்சட்டம் நீக்கப்பட்டபோதிலும் அரசாங்க ஊழியர்கள் உட்பட எவரும் நகரப்பகுதி செல்வதற்கோ அங்கிருந்து வருவதற்கோ இராணுவத்தினரால் அனுமதி வழங்கப்படவில்லை.

அமுலில் இருந்த ஊரடங்குச் சட்டம் நீக்கப்பட்டது என்ற செய்தி அறிந்து நாட் (4 ஆம் பக்கம் பார்க்க)

## இந்திய-இலங்கை உறவுவிரிசலுக்கு ஐக்கிய தேசியக் கட்சியே காரணம்

### சிறிலங்கா சுதந்திரக்கட்சி குற்றச்சாட்டு

(கொழும்பு)

இந்திய - இலங்கை உறவுகள் நலிவடைவதற்கு ஐக்கிய தேசியக் கட்சியின் வெளியுறவுக்கொள்கையே காரணம் என சிறிலங்கா சுதந்திரக் கட்சி குற்றஞ்சாட்டியுள்ளது.

நேற்றுமுன்தினம் பாராளுமன்றத்தில் இந்தியாவின் புதிய இந்திய வெளியுறவுக் கொள்கைகள் குறித்து ஏற்பட்ட விவாதத்தின் போது சிறிலங்கா சுதந்திரக்கட்சி இவ்வாறு குற்றஞ்சாட்டியது.

இதற்கு முன்னதாக இலங்கை வெளிவிவகார அமைச்சர் ஹரோல்ட் ஹேரத் இந்தியாவுடன் தமது உறவை மேம்படுத்த இலங்கை உறுதி (4 ஆம் பக்கம் பார்க்க)

## தென் தமிழீழத்தில் ஜிகாத்தால் கட்டாய மத மாற்றம்

(திருக்கோணமலை)

ஆயுதம் தாங்கிய முஸ்லிம் அமைப்பான ஜிகாத் குழுவினால் தமிழர்கள் பலவந்தமாக மதமாற்றம் செய்யப்பட்டு வருவதாக தெரியவருகிறது. தென் தமிழீழப் பகுதியில் இருக்கும் அகதி முகாம்களில் தங்கியுள்ள தமிழர்களையே பலாத்காரமாக மத மாற்றம் செய்ய நிர்ப்பந்திக்கப்பட்டு வருவதாக அங்கிருந்து வரும் செய்திகள் கூறுகின்றன.

திருக்கோணமலை மாவட்டத்திலுள்ள இன்னவியா என்னும் கிராமத்திலிருந்து அகதி முகாமிலிருந்து சுமார் பன்னிரெண்டு குடும்பங்களை (4 ஆம் பக்கம் பார்க்க)

## சிங்கள ஊர்காவற்படையால் இரு தமிழர்கள் படுகொலை

(மட்டக்களப்பு)

பக்கியெல்ல கிராமத்தில் இருந்து புறப்பட்ட சிங்கள ஊர்காவற்படையினர் பாலையடி வெட்டை கிராமத்தினுள் புகுந்து இருவரைச் சுட்டும் வெட்டியும் கொலைசெய்துள்ளனர். மேலும் இருவரைக் காயப்படுத்தியுள்ளனர். அம்பாறை மாவட்டத்திலுள்ள பக்கியெல்ல கிராமத்தில் இருந்து புறப்பட்ட சிங்கள ஊர்காவற்படையினர் மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள பாலையடி வெட்டையில் இந்தக் கோரச்செயலில் கடந்த திங்களன்று பிற்பகல் 3மணியளவில் ஈடுபட்டனர்.

இந்தச்சம்பவத்தில் த.அருள் (4ஆம் பக்கம் பார்க்க)

## வங்கி ஊழியர் ரெலோவால் கொலை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள கல்லடிக் கிராமத்தில் லட்சுமிகாந்தன் (45 (4 ஆம் பக்கம் பார்க்க)

## துணிகரமான முயற்சியால் மானத்தை காத்த இளம் பெண்

(வவுனியா)

வவுனியா பூந்தோட்டம் பகுதியில் உள்ள வீடு ஒன்றிற்குள் புகுந்த இராணுவத்தினர் தந்தையை துரத்திவிட்டு மகள் மீது பலாத்காரம் புரிய எத்தனித்த போதிலும் மகளின் சாதுரியத்தால் இராணுவத்தினரின் எண்ணம் நிறைவேறாமல் போனது.

சில தினங்களுக்கு முன்னர் குறிப்பிட்ட பகுதி வீட்டினுள் புகுந்த அங்கு நின்ற வயோதிபரான தந்தையை அழைத்து மகளை தனிமையில் விட்டுவிட்டு ஓடும்படி இராணுவத்தினர் விரட்டினராம்.

மகளை தனியே விட்டு ஓட முடியாது என்று அடம்பிடித்த (4 ஆம் பக்கம் பார்க்க)

### கடந்த கால இராணுவ நடவடிக்கையால்

## யாழ். மாநகர சபைக்கு 16கோடி 20இலட். ரூபாநஷ்டம்

(யாழ்ப்பாணம்)

கடந்தகாலத்தில் சிறிலங்கா விமானப் படை விமானங்களின் குண்டு வீச்சாலும், கடற்படைக் கப்பல் பீரங்கித் தாக்குதல்களாலும் யாழ்.மாநகர சபைக்குப் பதினாறு கோடியே இருபது இலட்சம் ரூபா நிலையான, அசையும் சொத்துக்களினால் நஷ்டம் ஏற்பட்டுள்ளது என யாழ். மாநகர சபை ஆணையாளரால் நியமிக்கப்பட்ட விசேட பொறியியலாளர் ஒருவரின் கணிப்பின்மூலம் தகவல் கிடைத்துள்ளது.

மேலும் இத்தகவலின்படி (4 ஆம் பக்கம் பார்க்க)

## 16 வீடுகள் தீ வைப்பு

(மன்னார்)

மன்னார் தீவில் உள்ள பொன்னையன் குடியிருப்பு என்னும் கிராமத்தில் பதினாறு வீடுகளை சிறிலங்கா இராணுவத்தினர் நாசப்படுத்தியுள்ளனர். கடந்த ஞாயிறன்று இச்சம்பவத்தின் போது இருவர் கைதுசெய்யப்பட்டிருக்கின்றனர். ஆனால் இவர்களைப் பற்றிய விபரங்கள் ஏதும் அறியவரவில்லை.

## நூல்கள் கொள்வனவிற்கு 2,15,000 ரூபா ஒதுக்கீடு

(கொழும்புத்துறை)

யாழ். மாவட்ட உள்ளூராட்சித் திணைக்களம் பொது நூலகங்களுக்கான நூல்களைக் கொள்வனவு செய்வதற்கென 2, 15, 000 ரூபாவை ஒதுக்கீடு செய்துள்ளது. இந்நிதி ஒதுக்கீட்டினால் இம்மாவட்டத்திலுள்ள 50பொது நூலகங்களுக்கான நூல்கள் கொள்வனவு செய்யப்படும் என்று யாழ். பிரதேச உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. க. டிவகலாலா தெரிவித்தார்,

இந்நிதி ஒதுக்கீட்டிலிருந்து யாழ். மாநகர சபைக்கு 85,000 ரூபாவும், நகரசபைக்கு 20,000 ரூபாவும், ஒவ்வொரு பிரதேச சபைக்கும் 10,000 ரூபா வீதம் 17 பிரதேச சபைகளுக்கும் மொத்தம் 1, 70, 000 ரூபாவும் நூல் (4 ஆம் பக்கம் பார்க்க)

## கூட்டுத்தாபனம், சபைகளில் உள்ளோருக்கு பொருந்தாது

(யாழ்ப்பாணம்)

அரசின் சுயவிருப்பத்தின் அடிப்படையிலான ஓய்வூதியத் திட்டம் அரச கூட்டுத்தாபனங்கள், சபைகள் போன்றவற்றில் கடமை புரியும் அரச ஊழியர்களுக்கு பொருந்தாது.

எனினும் அரச திணைக்களங்களில் இருந்து ஒப்பந்த அடிப்படையில் கூட்டுத்தாபனங்கள், சபைகள் போன்ற (4 ஆம் பக்கம் பார்க்க)

## போக்குவரத்து ஊழியருக்கு நிவாரணம்

(யாழ்ப்பாணம்)

வடபிராந்திய போக்குவரத்துச் சபையில் கடந்தகாலத் (4 ஆம் பக்கம் பார்க்க)

## கட்டுநிதியை விரைவில் அனுப்ப அரச அதிபர் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ். செயலகத்திற்கு வரவேண்டிய இந்த ஆண்டுக்குரிய கட்டுநிதியை விரைவில் அனுப்பி வைக்கும்படி அரசாங்க அதிபர் அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் மூலம் அரசைக் கோரியுள்ளார்.

கட்டுநிதி வந்து சேராமையால் செயலகத்தின் பல செயற்பாடுகளைச்செய்யமுடியாத நிலை இருப்பதாக அரச அதிபர் தெரிவித்தார். (ஈ)

## வரி விளம்பரம்

**விற்பனைக்கு**

நத்தார் புதுவருட வாழ்த்து மடல்களை மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம் (வியாபாரிகளுக்கு விசேட கழிவுண்டு) "மண்டேலா ரேடர்" இல. 256A பருத்தித்துறை வீதி, நல்லூர். "அரஸ்ஜவுளியகம்" 146 நவீன சந்தை, யாழ்ப்பாணம். (R/888)

**டில்கா வாச் வேக்ஸ்**
**DILKA WATCH WORKS**

வாடிக்கையாளர்களுக்கு! எமது ஸ்தாபனம் மீண்டும் 404, ஆஸ்பத்திரி வீதி, பஸ் நிலையம் முன்பாகவும், மானிப்பாய் வீதி, ஆனைக் கோட்டையிலும் இல. 3 சித்தன்கேணி றோட், பண்டத்தரிப்பிலும், ஆடியபாதம் வீதி கல்வியங்காட்டிலும் இயங்குகின்றன. சகல மணிக்கூடுகளும். றேடியோக்களும் 60 வருடத்திற்கு மேல் அனுபவமுள்ள தொழிலாளர்களால் உத்தரவாதத்துடன் திருத்திக் கொடுக்கப்படும். சகல எலக்ரோனிக் பற்றறிகளும் விற்பனைக்குண்டு. (B/1653)

**நியூ வெஸ்ரோன் எலெக்ரோனிக் கோப்**

எம்மிடம் T V. டெக், ரேடியோ, மணிக்கூடு. திருத்துதலும், ட்ரான்ஸ் போமர் மோட்டார் றிவைன்டிங் செய்துகொடுக்கப்படும்-புதிய, பழைய பாடல்கள், புரட்சிப் பாடல்கள் சிறந்த முறையில் பதிவுசெய்து கொடுக்கப்படும். 641, ஆலடிச்சந்தி (ஓட்டு மடம்) மானிப்பாய் வீதி. (1671)

**போட்டோஸ்ரட்**
**'ஸ்கைலைன்ஸ்'**

தரமான போட்டோஸ்ரட் றோணியோ வேலைகளுக்குத் தொடர்பு கொள்ளுங்கள். 281.B. மணிக்கூட்டுக்கோபுர வீதி, யாழ்ப்பாணம். 'SKYILINES' 281, B, Clock Tower Road, Jaffna. (ஏஜென்சி தபால் கந்தோர் அருகாமை) (B/1662)

**அன்ரன் ஆர்ட்ஸ்**
**ANTAN ARTS**

தொழில் ஸ்தாபனங்களுக்கான விளம்பரப் பெயர்ப்பலகைகள் குறித்த தவணையில், சிறந்த முறையில் எழுதிப் பெற்றுக் கொள்ளலாம். தொடர்பு கொள்க. அன்ரன் ஆர்ட்ஸ், C/O டில்கா வாச் வேக்ஸ், டில்கா மேல் மாடி, ஆஸ்பத்திரி வீதி. யாழ்ப்பாணம். (B/1684)

**தவறிவிட்டது**

இல 60, கடை வீதி, வவுனியாவைச் சேர்ந்த சின்னத்தம்பி நாகேஸ்வரன் என்பவருடைய அடையாள அட்டையும், 9 படம் எடுத்தபடியுள்ள படச்சுருள் (திருமணம்), காசோலை என்பன சங்குப்பிட்டிக்கும் பூநகரிக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் 107, பலாலி றோட், கந்தர் மடம் என்னும் முகவரியில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். (R 918)

**தவறிவிட்டது**

கண்டாவளையைச் சேர்ந்த சின்னப்பு இளையதம்பி என்பவரின் அடையாள அட்டை தவறிவிட்டது. அடையாள அட்டை இல. 611212020 V. கண்டெடுத்தவர்கள் இந்த விலாசத்தில் தயவு செய்து ஒப்படைக்கவும். நடராஜமுருகன் ஸ்ரோர்ஸ் முல்லைத்தீவு வீதி, வெங்கண்டல், கண்டாவளை. (R. 849)

---

O/L

க.பொ.த சாதாரணதரம்


**பகல்முழுநேரவகுப்பு**

# யூனிவேர்சல்

கந்தர்மடம் — யாழ்ப்பாணம்.

---

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி



பிறப்பு 1963 — 10 — 01

இறப்பு 1990 — 11 — 13

**மயில்வாகனம் மங்களேஸ்வரன்**

திதி: 1990-12-12

அன்னாரின் ஆன்மா சாந்தியடையும் வண்ணம் பிரார்த்திக்கும்

— குடும்பத்தினர்
வற்றாப்பளை,
முள்ளியவளை.

தகவல்:
செல்வராசா (மாமன்)
ராஜா ஸ்ரோர்ஸ்,
கரவெட்டி

(B. 1677)

---

# ஓராண்டு நினைவஞ்சலி



வீரஜனனம்
22-03-1969

வீர மரணம்
23-11-1989

**பா. சிவகுமார்**
**(சிவா)**

## கமல்

(திருவையாறு அரசியல் பொறுப்பாளர்)

பாடையிலே தூங்கும் போது
பைந்தமிழன் அழும் ஓசை கேட்கவேண்டும்!
கடலிலே எனது சாம்பல் கலக்கும் போது
என் தமிழே சலசலத்து ஓடவேண்டும்!
மரணம் ஒரு தடவைதான் வரும்
அதற்காக மானத்தை விட்டு சீவிக்க முடியுமா?
இறப்பிற்குப் பயந்து எம் இனத்தையே
அழித்து விட முடியுமா?
மக்களுக்காக மரணிப்பதே வாழ்விலும் -
பார்க்கச் சிறந்தது!

இறப்பென்பது முடிவல்ல
நிறைவாழ்வின் ஆரம்பமே!

உன் மரணம்
ஆயிரம் ஜனனம்!

தாய், சகோதரம் மற்றும்
உற்றார், உறவினர்கள்

இல. 75 கணேசபுரம்,
இனிநொச்சி.

(B/ 1698)

---

# கொள்ளை போனவற்றுக்கு மாணவரிடம் நஷ்டஈடு!

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா வைத்திய சாலையுடன் இணைந்து இருக்கும் தாதியர் பயிற்சி பாடசாலையிலிருந்து கொள்ளை போன உணவுப் பொருள்களுக்கு மாணவர்களே நஷ்டஈடு கட்ட வேண்டும் என தாதிகள் பயிற்சி பாடசாலை அதிபர் கேட்டுக்கொண்டுள்ளார் எனத் தெரியவருகிறது.

கடந்த ஜூன் மாதம் பதினைந்தாம் திகதியுடன் யாழ்ப்பாணம் தாதியர் பயிற்சி பாடசாலை இராணுவ நடவடிக்கைகள் காரணமாக மூடப்பட்டது. இதனால் அங்கு தங்கி நின்று பயிலும் மாணவர்களுக்கு உணவு வசதி செய்து கொடுப்பதற்காக அங்கு வைக்கப்பட்டிருந்த சீனி, அரிசி, பருப்பு போன்ற உணவுப் பொருள்கள் பழுதடைந்துவிடும் என்பதை உணர்ந்த சில திருடர்கள் பெருமனம் கொண்டு அவற்றைத் தாம் பங்கிட்டு எடுத்துக் கொண்டு சென்றனர்.

ஆனால் மீண்டும் நாளை இந்தப் பாடசாலை ஆரம்பிக்க உள்ள வேளையில் அபகரிக்கப்பட்ட அந்தப் பொருள்களுக்கு நஷ்டஈடு கட்ட வேண்டும் என தம்மை அதிபர் பணித்துள்ளதாக அங்கு பயிலுகின்ற மாணவர்கள் கவலை தெரிவித்துள்ளனர். மேலும் கடந்த ஐந்து மாதமாக தமக்கு எந்தவித வேதனமும் வழங்கப்படவில்லை எனவும் அவர்கள் வருத்தம் தெரிவித்தனர். (லோ)

---

## 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி



ஜனனம்: 09-08-1969
மரணம்: 11-12-1989

செல்வன்
**வீரசிங்கம் சிவதாசன்**

இரண்டு வருடம்
இறந்தே போயின
இன்னும் எங்களுள் நீ
உயிர்த்தே இருக்கிறாய்!
உணர்வில் கனவில்
உந்தன் உருவம்
உலவும் வாழும்.

— அக்கா, அத்தான்.

மண்டைதீவு.

(R. 916)

---

**வியாபாரம் பெருக**
**விளம்பரம் செய்க**

---

# ரவி அன் ராஜ் சில்க்ஸ்

**மீண்டும் பழைய இடத்தில்**

எமது ஸ்தாபனம் மீண்டும் இல, 77 பெரிய கடை வீதி, யாழ்ப்பாணத்தில் இயங்குகின்றது என்பதை வாடிக்கையாளர்களுக்கு அறியத் தருவதில் மகிழ்ச்சி அடைகின்றோம்.

(B 1688)

---

# புதிய மாணவர்களை அனுமதித்தல்

## கல்வியாண்டு 1991/92

இலங்கைப் பல்கலைக்கழகங்களின் வெளிவாரிப் பட்டப்பாட நெறிகளான

- கலைமாணி B. A
- விஞ்ஞானமாணி B.Sc (புள்ளிவிபரவியல்)
- வணிகமாணி B.Com

க. பொ. த உயர் தரம் 3 பாடங்களில் சித்தி அல்லது பயிற்றப்பட்ட ஆசிரியர்கள் விண்ணப்பிக்கலாம்.

**விரிவுரைகள் 5-1-1991 இல் ஆரம்பமாகின்றன. விபரத்தினையும் விண்ணப்பப் படிவத்தினையும் ரூபா 10/- செலுத்தி நேரில் பெற்றுக்கொள்ளவும்:**

கடந்த முறை நடந்த பரீட்சையில் எமது கல்லூரியிலேயே 75 வீத மாணவர்கள் சித்தி அடைந்துள்ளதை மிக மகிழ்ச்சியுடன் அறியத் தருகின்றோம்.

பட்டப்படிப்புகள் கல்லூரி,
(உதவி அரசாங்க அதிபர் பணிமனைக்கு அருகாமை),
உடுவில் இழக்கு.
சுன்னாகம்.

உதவிப் பதிவாளர்
பட்டப்படிப்புகள் கல்லூரி
148/1 ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

(B/1679)

## சிந்தனைக்கு

தன் போதனையைத் தானே பின்பற்றும் ஒருவர் சிறந்தவர். நல்லது எதைச் செய்ய வேண்டுமென்று நான் இருபது பேருக்கு நற்போதனை செய்வது எளிது: என் போதனையையே பின் பற்றி நடக்கும் இருபது பேரில் ஒருவராய் இருப்பது, அவ்வளவு எளிதல்ல.

- ஹோரஸ் மன்

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 12-12-90
தொலைபேசி
ஆசிரியபீடம்: 025-2839 நிர்வாகபீடம்: 2298
த.பெ.எண் 95

# ஜெயவர்த்தனாவின் ஜனநாயகப் போதனை

நாட்டையும், நாட்டின் ஜனநாயக பாரம்பரியத்தையும், பாதுகாக்க முன்வருமாறு முன்னாள் ஜனாதிபதி திரு.ஜே.ஆர். ஜெயவர்த்தனா இளைஞர்களுக்கும், யுவதிகளுக்கும், பண்டாரநாயக்கா சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் மாணவர் தலைவர்கள் மத்தியில் பேசும் போது வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இலங்கையில் ஒரு ஜனநாயக பாரம்பரியம் இருந்ததென்பதும், அது பற்றி திரு. ஜே. ஆர் ஜெயவர்த்தனா பேசுவதும், அதைப் பாதுகாக்க அழைப்பு விடுப்பதும் சாத்தான் வேதம் ஓதுவதற்கு ஒப்பான ஒரு செயலாகும். ஜனநாயகப் பாரம்பரியங்களில் 51 வீதமான பெரும்பான்மையினர் 49 வீதமான சிறுபான்மையினரை ஆள்வதாக பொதுவாகவே குறை கூறப்படுவதுண்டு. மாறாக சிறுபான்மையினர்ஆட்சி நடைபெறுவதும் உண்டு. ஆனால் உண்மையில் ஜனநாயகப் பாரம்பரியம் என்பது பெரும்பான்மையினர் ஆள்வதே ஒழிய சிறுபான்மையினரை அடக்கி ஆள்வதில்லை. அவ்வாறு அடக்கி ஆள்வது ஜனநாயகப் பாரம்பரியம் எனக் குறிப்பிடப்படுவதில்லை. பெரும்பான்மையினரின் எதேச்சாதிகாரம் என்றே குறிப்பிடப்படுகின்றது.

ஆனால், இலங்கையின் வரலாற்றில் பெரும்பான்மையோரின் எதேச்சாதிகாரமே ஜனநாயகப் பாரம்பரியமாகத் தொடர்ந்து இருந்து வந்துள்ளது. இந்த ஜனநாயகப் பாரம்பரியம் ஜே. ஆர். ஜெயவர்த்தனா ஆட்சிக் காலத்தில் மேலும் மெருகூட்டப்பட்டது.

அவரது ஆட்சிக் காலத்தில் ஜனநாயகத்தைப் பேணவும் - பாதுகாக்கவும், அவர் புதுப்புது ஜனநாயக முறைகளை இலங்கைக்கு அறிமுகப்படுத்தினார். 1977இல் தமிழ்த் தேசிய இனத்தைப் பார்த்து, 'போர் என்றால் போர் சமாதானம் என்றால் சமாதானம்' என்ற அறைகூவலுடன்தன் ஜனநாயகப்பாரம்பரியத்தை தொடங்கினார். அதன்பின் அவர் மேற்கொண்ட ஜனநாயக நடவடிக்கைகள் பல. இதற்கு மூத்தாய்ப்பு வைத்தாற் போல் 1983இல் இனக்கலவரத்தின் போது முழு இலங்கைக்குமான ஜனாதிபதி என்று தன்னைக் காட்டிக் கொண்டே- 'நான் சிங்கள மக்களின் தலைவனாக இருக்கவே விரும்புகிறேன்' என்று தெரிவித்தார்.

தமிழ்த் தேசிய இனத்திற்கு இலங்கையின் ஜனநாயகப் பாரம்பரியத்தில் இடம் — திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனாவிற்கு முன்பிருந்தே — ஒதுக்கப்படாவிட்டாலும்,ஜே.ஆர்.ஜெயவர்த்தனாவின்ஜனநாயகத்திலும் தார்மீக சமுதாயத்திலும் தமிழர்கள் மனிதர்கள், அவர்களுக்கு அடிப்படை உரிமைகள் உள்ளன என்பதும் புறக்கணிக்கப்பட்டது.

மேலும், இலங்கையில் ஜனநாயகப் பாரம்பரியம் என்று பொதுவாகக் குறிப்பிடப்பட்டு வந்தது தேர்தல் பாரம்பரியம் மட்டுமே. அத்தேர்தல் பாரம்பரியமும் திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனா காலத்திலேயே சீரழிக்கப்பட்டது. உதாரணமாக 1981ஆம் ஆண்டில் கடந்த மாவட்டசபைத் தேர்தலில் யாழ்ப்பாணத்தில் அன்றைய அரசாங்கத்தால் மேற்கொள்ளப்பட்ட தேர்தல்மோசடி ஆகும். இந்ததேர்தல் மோசடியில் வாக்குப் பெட்டிகள் மறைந்தன. பின்னர் தோன்றின. கத்தைகத்தையாக வாக்கு சீட்டுகள் வாக்குப்பெட்டிக்குள் போடப்பட்டிருந்தன. இதேபோன்று 1982 இல் முதல்முதலில் இலங்கை ஜனநாயகத்திற்கு ஒப்பம் கோடல் முறையை அவர் அறிமுகப்படுத்தினார்.

அடுத்ததாக மக்களின் பிரதிநிதிகள் என ஐ. தே. கட்சியில் இருந்து தெரிந்தெடுக்கப்பட்டவர்களின் திகதி இடப்படாத இராஜினாமாக் கடிதங்களை என்றும் தனது சட்டைப் பைகளிலேயே கொண்டு திரிந்தார். இதுவும் இலங்கையின் ஜனநாயகப் பாரம்பரியத்திற்கு ஜே. ஆர். ஜெயவர்த்தனா ஆற்றிய தொண்டாகும்.

இவை யாவற்றிற்கும் மேலாகப் பயங்கரவாதத் தடைச்சட்டத்தை நிறைவேற்றி மனிதனின் அடிப்படை உரிமைகள் பலவற்றை பறித்தெறிந்ததும் திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனா விட்டுச் சென்ற ஜனநாயகப் பாரம்பரியம் தான்.

ஜே.ஆர்.ஜெயவர்த்தனா இலங்கைக்கு விட்டுச்சென்ற 'ஜனநாயகப் பாரம்பரியத்தினாலேயே' சிவில் அதிகாரிகள் நாட்டு நிலைமைகளை பொலிஸாருக்கும், இராணுவத்தினருக்கும் விளக்கும் நிலைமாறி, இன்று இராணுவத் தளபதிகள் நாட்டின் நிலைமைகளை சிவில் அதிகாரிகளுக்கு விளக்கும் நிலைமை ஏற்பட்டிருக்கிறது.

இந்த நிலையில், ஜனநாயகப் பாரம்பரியத்தைப் பேணுவதற்கு இளைஞர்களையும் யுவதிகளையும் வாருங்கள் என திரு. ஜே. ஆர் ஜெயவர்த்தனா அழைப்பு விடுப்பது எந்த ஜனநாயகபாரம்பரியத்தைப் பேணுவதற்கு? தனது ஜனநாயகப் பாரம்பரியத்தையா? அல்லது அதைவிட இன்னும் சற்று 'மேலோங்கிய' நிலையில் உள்ள இன்றைய சிறிலங்கா ஜனாதிபதி திரு. பிரேமதாசாவின் ஜனநாயகப் பாரம்பரியத்தையா?

# மாவீரர் வாரம்

என்னுடன் ஒத்த தருமத்தை ஏற்றார்
இயைந்த இவ் 'வாலிபர் சபை'க்கே
தன்னுடல், பொருளும், ஆவியுமெல்லாம்
தத்தமா வழங்கினேன் எங்கள்
பொன்னுயர் நாட்டை ஒற்றுமை உடைத்தாய்
சுதந்திரம் பூண்டது வாகி
இன்னுமோர் நாட்டின் சார்பில தாகிக்
குடியரசியன்ற தாயிலக.

- சுப்பிரமணிய பாரதியார்

## ஒரு கண்ணோட்டம்

இது ஆங்கிலேயர்களிடமிருந்து விடுதலை பெறுவதற்காக இந்தியா போராடிக் கொண்டிருந்த காலப் பகுதியில், சுப்பிரமணிய பாரதி என்ற கவிஞன் எழுதிய பாடலின் ஒரு பகுதியாகும். இத்தாலிய தேசத்தின் விடுதலைப் போராட்ட முன்னோடிகளில் ஒருவனான மாஜினி என்பவர் 'யௌவன இத்தாலி' என்ற சங்கத்தின் முன் செய்து கொண்ட சத்தியப்பிரமாணம் போல எண்ணி எழுதப்பட்ட இக் கவிதையின் ஒவ்வொரு பகுதியும் சுதந்திர இந்தியா பற்றிப் பாரதி கண்ட கனவைத் தெளிவாகக் காட்டும்.

எமது தேசத்தின்- சொந்த நாட்டின் விடுதலைக்காகப் போராடிக்கொண்டிருக்கும் இந்த வேளையில்- இந்த சுதந்திரவேள்வியில் தமது இன்னுயிரை ஆகுதியாக்கிய மாவீரர்களை நினைவு கூரும் முகமாக நவம்பர் 21-27 வரை "மாவீரர் வாரம்" எமது நாட்டு மக்களால் கடைப் பிடிக்கப்பட்டது.எமது தேசத்தின் விடுதலைப் போராட்டத்தில் பங்கு கொண்டு ஒரு முற்றுகையில் காயம்பட்ட நிலையில் தப்பித்துப் பின்னர் மரணத்தைத் தழுவிய தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பு வளர்ச்சி காண அத்திவாரமாகிய சத்தியநாதனின் நினைவுகளோடு மாவீரர் வாரம் கடைப்பிடிக்கும் வழக்கம் ஆரம்பமாயிற்று எனலாம்.

எனினும் கடந்த 1989 நவம்பர் மாதத்திலேயே மாவீரர் நாள் பற்றிய செய்திகள்- விபரங்கள் என்பன மக்களுக்கு விளம்பரப்படுத்தப்பட்டன. இந்திய அமைதி காக்கும் படை என்ற போர்வைக்குள் புகுந்து கொண்டு எமது தேசத்தை- தாயகப் பூமியை சுபளீகரம் செய்யவந்தவர்கள் மூக்குடைபட்டு தமதுமூட்டை முடிச்சுகளோடு வெளியேற ஆயத்தமான சந்தர்ப்பத்தில் மண் மீட்புக்காக உயிர் தந்த மாவீரர்களைக் கௌரவிக்க மக்கள் முன் வந்தனர்.

கடந்த வருடத்தில் அம்பாறை மாவட்டத்தின் அக்கரைப்பற்றுவில் மாவீரர் நாளில் இடம் பெற்ற மாபெரும் பொதுக்கூட்டமும், அதில் கலந்து கொண்ட மக்கள் வெள்ளமும் எங்கள் மண்ணை ஆக்கிரமிக்க எவரையும் அனுமதியோம் என்பதை அறைந்து சொல்லியது. வீட்டுக்கு வீடு வேலிகளுக்கு ஊடாகப் புகுந்து வரும் ஐ.பி.கே.எவ் ஜவான்களும் கருநாகம் போல் எம்மண்ணில் குடி கொண்ட சுயநலவாதிகளும் நிறைந்திருந்த போதும் எந்த விதமான அச்சத்திற்கும், பதற்றத்திற்கும் இடங்கொடுக்காமல் மாவீரர்களைக் கௌரவித்தனர் நம் தேச மக்கள் ஒவ்வொருவரும்.

ஆனால் இந்த ஆண்டில் எங்கள் நாட்டின் விடுதலைப் போராட்டம் புதியதொரு பரிணாமத்தைப் பெற்றிருந்தது. 1987 இல் இந்தியத் தலையீட்டால் இடைநிறுத்தப்பட்ட சிறிலங்காவுடனான யுத்தம் மீண்டும் மிக உக்கிரமாக ஆரம்பிக்கப்பட்டு சுமார் ஆறு மாதங்களாக நடைபெற்று வரும் வேளையிது. எங்கள் நாட்டின் தென்பகுதியெங்கும் மக்களை வீடுகளை விட்டு விரட்டியடிக்கவும், வடக்குப் பகுதியில் மக்களை மிரட்டிப் பணிய வைக்கவும் சிறிலங்கா அரசாங்கம் தன் பலத்தை முழுமையாகப் பயன் படுத்த முற்பட்டிருக்கும் சமயமிது. முப்பத்தைந்து ஆண்டுகளுக்கும் மேலாக, மெத்தப்படித்த மேதாவிகள் வாதாடியும், மக்கள் போராடியும் எந்தப் பயனும் விளையவில்லை என்ற காரணத்தால் மூளை விட்ட ஆயுதப் போராட்டத்தில் கலந்து கொள்கிறோம் என்னும் போர்வைக்குள் புகுந்து கொண்டவர்கள் எதிரிப்படையான சிறிலங்கா இராணுவத்துடன் கைகோர்த்து எமது மக்களை வேட்டையாடக் கங்கணம் கட்டிக் கொண்ட காலம் இது. இலக்குகளை மறந்து திசை மாறிச் சென்றவர்களினால் தொந்தரவு அனுபவிக்கும் போதும் வேதனைகளைத் தாங்கிக்கொண்டு மக்கள் தம் விடிவுக்காகப் போராட முன் வருவர் என்பதை எடுத்துக் காட்டும் ஒரு சந்தர்ப்பமாக 1990 இன் மாவீரர் வார நிகழ்ச்சிகள் அமைந்தன.

'மாவீரர் வாரம்' களியாட்டங்களுக்குரிய காலப்பகுதி அல்ல. அதேவேளை சோகம் ததும்ப அழுது வடியும் நேரமுமல்ல என்ற அறிவிப்புடன் மாவீரர் வாரம் பற்றிய செய்திகள் வெளிவரத் தொடங்கிய உடனேயே, ஊரடங்கு உத்தரவு பற்றி வானொலி முழங்கியது; கண்டபடி பறந்து திரிந்த ஹெலிக்கொப்டர்கள் வேட்டுக்களைத் துப்பத் தொடங்கியது. பொம்மரும், அவ்ரோவும், வை - 12ம் தத்தம் பங்கிற்கு குண்டுமழைகளைப் பொழியத் தொடங்கின. குறிப்பாக வடக்கு மாகாணப் பகுதியை நோக்கி அரசாங்கம் தாக்குதலுக்கு இலக்குகளைத்தேடத்தொடங்கியது. விடுதலைப் புலிகளின் முகாம்களுக்குச் சமீபமாக மக்கள் வசிக்கக் கூடாது என்பது முதல் 'ஊரடங்கு' அமுலாக்கப்படும் வேளைகளில் தெருக்களில் நடமாடுவதும், கூட்டம் கூடுதலும் தடைசெய்யப்பட்டிருப்பதாக அரசாங்கம் பிரகடனப் படுத்தியது.

மாவீரர் வாரத்தின் ஆரம்பத்திற்கு முதல்நாளான இருபதாம் திகதி குறிப்பாக வலிகாமம், வடமராட்சி, தென்மராட்சிப் பகுதிகளெங்கும் குண்டு மழை பொழியப்பட்டது. 19ஆம் திகதி முதல் ஊரடங்கு பிறப்பிக்கப்பட்டதாக அரசாங்க வெகுஜன தொடர்புச் சாதனங்கள் பறையறைந்தன.

ஆனாலும் 'எமது தாய்நாடு விடுதலை பெற வேண்டும். எம்மைப் பிணைத்திருக்கும் அடிமைவிலங்கு உடைத்தெறியப்படல் வேண்டும் எமது மக்கள் சுதந்திரமாக கௌரவமாக பாதுகாப்பாக வாழ வேண்டும். இந்த இலட்சியம் ஈடேற வேண்டுமாயின் நாம் போராடித்தான் ஆக வேண்டும்' என்ற தலைவனின் குரலைப் புரிந்து கொண்டவர்களாக மக்கள் சரித்திர நிகழ்வுகளாகப் பரிணமித்த மாவீரர்களை நினைவு கூரத் தொடங்கினர்.

எத்தனை குண்டுகள் வீசப்பட்டாலும் எமது இரும்பையொத்த உறுதியைத் தகர்த்து விடமுடியாது என்பதைக் காட்டும் வகையில் வீதிகள் தோறும் வீதி வளைவுகளும், அலங்காரப் பந்தல்களும் எழுந்து நிற்கலாயின. எங்களின் கல்லறைகளுக்கும் கரங்கள் முளைக்கும்- அவை கருவிகளைத் தாங்கும் எதிரிகளைத் தாக்கும் என்று சொல்லிக் கொண்டவாறு கம்பீரமாகக் காட்சிதந்தன மாவீரர்களின் திருஉருவப் படங்கள்.

சந்திக்குச் சந்தி ஒலிநாடாக்களிலிருந்து விடுதலை வேதங்களாக, கானகத்தின் கானமாக இசைப்பாடல்கள் ஒலிபரப்பப்பட்டன. தெருவெங்கும் ஊர்ந்து திரிந்தோரின் உதடுகள் எல்லாம்'இந்த மண் எங்களின் சொந்தமண்' என்பதைத் திரும்பத் திரும்பச் சொல்லிக்கொண்டன. 'எதிரிகளின் பாசறையைத் தேடிப் போகின்றோம்' என்ற குரல் செவிகளில் நிரம்பி வழியலாயிற்று.

ஆங்காங்கே மாவீரர்களைக் கௌரவிக்கும் முகமான எழுச்சிக் கூட்டங்கள், அவற்றில் திரளாக மக்கள் கூட்டம்,உருவப்படங்களைக் கொண்டு அமைக்கப்பட்ட நினைவுத் தூபிகளுக்கு மலர் சாத்தி அஞ்சலி தெரிவித்த காட்சிகள் ஒவ்வொரு கிராமத்திலும் இடம் பெறலாயிற்று.

( வளரும் )

### இந்திய இராணுவத்துடன் இணைந்து

# ஈ.பி.ஆர்.எல்.எவ். நாட்டிற்கு துரோகம் செய்தார்கள்

- ரஞ்சன்

(லண்டன்)

இலங்கையின் பாதுகாப்புத் துறை ராஜாங்க அமைச்சர் ரஞ்சன் விஜேரட்ண அவர்கள் லண்டன் பி. பி. ஸி. நிருபரின் கேள்விகளுக்கு தமிழ் மொழியில் பதிலளித்தார்.

விடுதலைப்புலிகள் தவிர்ந்த ஏனைய குழுக்கள் பற்றிய கேள்வியொன்றுக்குப் பதிலளித்த அவர் ஈ. பி. டி. பி, புளொட், ரெலோ போன்றவை அரசுக்கும், படையினருக்கும் முழு ஒத்துழைப்பு நல்கி வருகின்றனர். ஆனால் ஈ. பி. ஆர். எல். எவ்வினரை நாம் நம்ப முடியாது. ஏனெனில் மாகாணசபைப் பொறுப்பை ஏற்றுக்கொண்ட அவர்கள் நம்பிக்கைக்கு உரியவர்களாக நடந்து கொள்ளாததுடன் இந்தியஅமைதிப்படையுடன் இணைந்து நாட்டுக்கு எதிராகச் செயற்பட்டவர்கள் அவர்களே என்றும் குறிப்பிட்டார்.

# கிணற்றில் வீழ்ந்து மரணம்

(சாவகச்சேரி)

யாழ். பல்கலைக்கழக பிரதிப்பதிவாளர் தவறுதலாகக் கிணற்றில்மூழ்கி அகாலமரணமானார்.

கடந்த திங்கள் காலை கிணற்றில்தண்ணீர் அள்ளிக்கொண்டிருந்தபோது கைதவறிக் கிணற்றில் வீழ்ந்தார். யாழ். பல்கலைக் கழகத்தில் பிரதிப் பதிவாளராகக் கடமையாற்றும் மூன்று பிள்ளைகளின் தந்தையான திரு.ஆ.குணரட்னம் (42) (சங்கத்தானை சாவகச்சேரி) என்பவரே அகால மரணமாகியுள்ளார். (35)

# ஈராக்குடன் பேச்சுவார்த்தையில் அமெரிக்காவிற்கு அக்கறையில்லை

## ஈராக்கிய வெளியுறவு அதிகாரி குற்றச்சாட்டு

(பாக்தாத்)

ஈராக்குடன் ஜனவரி மூன்றாம் திகதிக்குப்பின்னர்தான் பேச்சுவார்த்தை நடத்த தாம் தயாராக இருப்பதாக அமெரிக்க வெளியுறவு அமைச்சர் ஜேம்ஸ் பேகர் அறிவித்திருப்பது பேச்சுவார்த்தையில் அமெரிக்கா அக்கறையில்லை என்பதையே காட்டுகிறதுஎன ஈராக்கிய வெளியுறவு அதிகாரிகள் தெரிவித்தனர்.

டிசம்பர் 12ஆம் திகதி ஜேம்ஸ் பேகருடன் பேச்சுக்கள் நடத்த ஈராக் விருப்பம் தெரிவித்தபோதும் அவர் அந்தத் திகதியில் பேச்சுக்கள் நடத்த முடியாது என்றும், ஜனவரி 3ஆம் திகதிக்குப் பின்னரே பேச்சுக்கள் நடத்தத் தயார் என்றும் அறிவித்தார்.

இவரின் இந்த அறிவித்தலைத் தொடர்ந்து ஈராக்கிய அதிகாரிகள் அமெரிக்காவை குற்றஞ்சாட்டி வருகின்றனர்.

ஜனவரி 15ஆம் திகதிக்குள் குவைற்றில் இருந்து ஈராக் வெளியேற ஐ நா. பாதுகாப்புச் சபை காலக்கெடு விதித்திருக்கும் நிலையில் ஜனவரி 3ஆம் திகதிக்குப் பின்னரே பேச்சுவார்த்தை என அமெரிக்கா அறிவித்திருப்பது ஈராக்கிற்கு அவகாசம் வழங்கப்படுவதற்கு அமெரிக்கா விரும்பவில்லை என்பதையே காட்டுகிறதுஎன ஈராக் கூறியுள்ளது.

இதற்கிடையில் வளைகுடாவில் போருக்கான சூழ்நிலையை உருவாக்க சகல ஏற்பாடுகளையும் அமெரிக்கா செய்து வருகிறது என வளைகுடாவிற்கான அமெரிக்க பாதுகாப்புப் படையின் அதிகாரி தெரிவித்துள்ளார்.

## கார்த்திகை, மார்கழி மாத கட்டுநிதியை விரைவில் அனுப்ப கல்விப் பணிப்பாளர் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ். கல்வித்திணைக்களத்திற்கான கார்த்திகை, மார்கழி மாதங்களுக்குரிய கட்டுநிதியை விரைவில் அனுப்பி வைக்கும்படி பிராந்தியக் கல்விப் பணிப்பாளர் திரு. இரா. சுந்தரலிங்கம் அத்தியாவசிய சேவைகள் பிரதி ஆணையாளரைக் கோரியுள்ளார்.

மேற்படி இரு மாதங்களுக்கும் உரிய சுமார் 67 மில்லியன் ரூபா கல்வித் திணைக்களத்திற்கு இதுவரை வந்து சேரவில்லை. இப்பணத்தைப் பணமாக அனுப்பி வைக்கும்படியும் அவர் கோரியுள்ளார். (க)

## குழந்தை காயம்

(வவுனியா)

வவுனியா தாண்டிக்குளத்திற்கும் மருக்காரம்பளைக்கும்இடைப்பட்ட பத்தினியார் மகிழங்குளம் பகுதியில் மீண்டும் கடந்த 7ஆம் திகதி பொம்மர் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதில் செல்வராஜா என்பவரது ஒன்றரை வயதுக் குழந்தை ஒன்று காயமடைந்தது.

இந்தத் தாக்குதல் சம்பவத்தில கனகசபாபதி என்பவரது பலசரக்குக் கடையும், வீடும் சிறிது சேதமடைந்தன. (தி)

## மத்திய அரசு தயங்காது

(சென்னை)

அஸாம் மாநிலத்தைப் போல் தமிழ்நாட்டிலும் விரோத நடவடிக்கைகள் அதிதாட்சிப்படுத்தப்பட்டால், மத்திய அரசாங்கம் நடவடிக்கை எடுக்கத் தயங்காது. இவ்வெச்சரிக்கையை ஆளும் ஜனதாக் கட்சிச் செயலாளரான ஓம் பிரகாஷ்சௌதாலா நேற்றுச் சென்னையில் தெரிவித்தார்.

## முறைகேடாக நடந்தால் தொடர்பு கொள்க

(பூநகரி)

கேரதீவு - சங்குப்பிட்டி இறங்குதுறைகளில் சேவைக்காக அமர்த்தப்பட்டிருப்பவர்கள் எவராவது உங்களை அவமதிக்கும் வகையில் நடந்து கொண்டாலோ, அல்லது லஞ்சம் கேட்டாலோ அவர்களுடன் நேரடியாக முரண்படாமல் தங்களுடன் தொடர்பு கொள்ளும்படி பொதுமக்களை மன்னார் பகுதி விடுதலைப் புலிகள் நிதிப் பொறுப்பாளர் கே. சபேசன் கேட்டுக் கொண்டுள்ளார். (71)

## ஆதாரம் காட்டிப் பெறவும்

(பூநகரி)

பூநகரி சங்குப்பிட்டி வீதியில் நகை, பணம், அடையாள அட்டைஎன்பனகண்டெடுக்கப்பட்டுபூநகரி பிரதேசப்பொறுப்பாளர் கு. சாமிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

அத்துடன் நாகேஸ்வரன் இன்னத்தம்பி (வவுனியா) என்பவருடைய அடையாள அட்டையும் அவரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர்கள் தகுந்தஆதாரம்காட்டி பெற்றுக் கொள்ளவும் (71)

## பட்டதாரிகள் சம்பளம் உடன் வழங்க ஏற்பாடு

(கொழும்பு)

கடந்த பல வருடங்களாக வழங்கப்படாமல் இருந்த பட்டதாரி ஆசிரியர்களுக்குரிய சம்பளம் உடனடியாக வழங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இந்த நடவடிக்கைகள் குறித்து கல்வி ராஜாங்க அமைச்சுக்கு வெளிவந்த புகார்களை அடுத்து மேற்படி ராஜாங்க அமைச்சு இந்த ஏற்பாடுகளைச் செய்ததாகக் கூறப்படுகிறது.

## மாணவருக்கும் காசோலை

(யாழ்ப்பாணம்)

இம்முறை யாழ். பல்கலைக் கழகத்தில் உள்ள திறமை மிக்க மாணவர்களுக்கு வழங்கப்படும் கொடுப்பனவு முன்பு ஒருமுறையும் இல்லாதவாறு காசோலைகளாக வழங்கப்பட உள்ளது. பல்கலைக்கழக நிர்வாகத்திடம் தாள் நாணயங்கள் இல்லாததாலும் நடைமுறையில் இப்பணம் வந்து போகாததாலும் இந்நிலை ஏற்பட்டுள்ளதாக தெரிகிறது.

## கைகலப்பு!

கோயம்புத்தூர் இறையில் காவலில்வைக்கப்பட்டிருக்கும் காஷ்மீர் தீவிரவாதிகளுக்கும், சிறை அதிகாரிகளுக்குமிடையில் கைகலப்பு நேற்றுக்காலை ஏற்பட்டது. இக் கைகலப்பில் காயமடைந்த சிறை அதிகாரிகள் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். சிறைக் கைதிகளுக்குக் காலை உணவு பரிமாறும்போதே இக்கைகலப் பேற்பட்டது.

## ஜப்பானில் மொழி பெயர்ப்பு

தமிழ்க் காப்பியங்கள் எனக் கூறப்படும் சிலப்பதிகாரமும், கம்பராமாயணமும் ஜப்பானிய மொழியில் மொழிபெயர்க்கப்படுகின்றன.


இந்தத் தகவலை ஜப்பானியபௌத்த ஆய்வு நிறுவனப் பிரிவு தெரிவித்தது. இந்த மொழி பெயர்ப்பின் மூலம் தமிழ் கலாசார, பண்பாட்டு அம்சங்கள் ஜப்பானிய மக்களைப் போய்ச் சேரும் என நம்புவதாகவும் அந்த ஆய்வு நிறுவனம் தெரிவித்துள்ளது.

## சுட்டுக்கொலை!

(வவுனியா)

பூந்தோட்டம் பகுதியில் உள்ள இராணுவத்தினரால் கடந்த 9ஆம் திகதி தமிழ் இளைஞர் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டார்.

அங்காடி வியாபாரியான மேற்படி இளைஞர் இராணுவத்தினர் அழைத்தபோது ஓடியதாலேயே சுடப்பட்டார் என்று தெரிவிக்கப்பட்டது(தி)



---

யாழ்

கட்டடங்கள், வாகனங்கள், நீர் விநியோகம் ஆகியவற்றிற்கு எட்டுக் கோடியே அறுபது இலட்சம் ரூபா நஷ்டம் ஏற்பட்டுள்ளது. இதில் கட்டடங்களுக்கு ஐந்து கோடி எழுபது இலட்சம் ரூபாவும், வாகனங்களுக்கு இரண்டு கோடி ரூபாவும், நீர் வழங்கல் பிரிவுக்கு முப்பது இலட்சம் ரூபாவும், ஏனைய சிறு தளபாடங்களுக்கு அறுபது இலட்சம் ரூபாவும்நஷ்டம் ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ். மாநகர சபைக்குட்பட்ட மின்சாரப் பகுதிக்கு ஏழு கோடியே அறுபது இலட்சம் ரூபா மொத்தமாக நஷ்டமேற்பட்டுள்ளது.

இந்த நஷ்டங்களால் தற்போது மாநகரசபை பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாக யாழ். மாநகர சபை ஆணையாளர் தெரிவித்ததுடன், சகல புள்ளி விபரங்களும் அடங்கிய பட்டியல்கள் தயாரித்து யாழ். மாவட்ட அரசாங்க அதிபரூடாக தமது தலைமை அலுவலகத்திற்கு அனுப்ப ஏற்பாடு செய்துள்ளதாக அவர் கூறினார். (லோ)

---

விரும்பிய

விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

விண்ணப்பித்த ஒவ்வொரு ஊழியர்களினதும் தொழிலின் தரம், சேவைக்காக அவர்கள் பெற்றுக்கொண்ட விசேட பயிற்சிகள் போன்ற பல்வேறு அம்சங்கள் பற்றித் தீவிரமாக ஆராய்ந்த பின்னரே ஒய்வூதியம் வழங்கப்பட இருக்கிறது. (க)

---

இந்திய -இலங்கை

பூண்டுள்ளது என்றும்' இலங்கை - இந்திய வெளியுறவு அமைச்சர்களின் மாநாடு விரைவில் நடைபெறும் என்றும் பாராளுமன்றத்தில் தெரிவித்திருந்தார்.

இதன் மீதான விவாதத்தின்போதே சிறிலங்கா சுதந்திரக்கட்சி மேற்கண்டவாறு கூறியது.

இதேவேளை இந்திய வெளியுறவுத் துறை அமைச்சர் வி சி. சுக்லா ஜனவரிமாதக் கடைசியில் இலங்கை வரவுள்ளார் என இந்திய வெளியுறவு அமைச்சகம் அறிவித்துள்ளது.

---

புலிகள்

விமானப்படை முகாமிற்கும், இராணுவ முகாமிற்கும் ஓடிவிட்டனர்.

இத்தாக்குதலில் இராணுவத்தினரிடமிருந்து ரீ - 56 -2 துப்பாக்கி 2, மகசின் 8, ஐ எம். ரவைகள் 270, எஸ்.எல். ஆர். துப்பாக்கி 1. மகசின் 3, நேட்டோ ரவைகள் 60, ரீ 81 ரக மகசின் 1 ஆகியன புலிகளால் கைப்பற்றபபட்டன.

அதேவேளை இத்தாக்குதலை ஊர்ஜிதப்படுத்திய சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்கள் இத்தாக்குதலில் ஐந்து இராணுவத்தினர் கொலலப்பட்டதாகவும், நான்கு இராணுவத்தினர் படுகாயம் அடைந்ததாகவும், ஒருவரைக் காணவில்லை எனவும் ஆயுதங்கள் அபகரிக்கப்பட்டதாகவும் தெரிவித்தன.

---

சிங்கள

(12,பக்கியெல்ல), த தருமன் (19, 35ஆம் கிராமம்) ஆகியோர் கொலைசெய்யப்பட்டவர்கள் ஆவர். மேலும் இந்தச் சம்பவத்தில் சாமித்தம்பி (50, 37ஆம் கிராமம்), சின்னவன் (18, 35ஆம் கிராமம்) ஆகியோர் காயமடைந்தனர்.

---

வவுனியா

றுக்கணக்கான மக்களும், அரசாங்க ஊழியர்களும் வவுனியா நகரப்பகுதி செல்லும் நோக்குடன் பூந்தோட்டம் சென்றபோது அங்கிருந்த இராணுவத்தினரால் அனைவரும் திருப்பி அனுப்பப்பட்டனர் இருப்பினும் யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு செல்லும் எண்ணத்துடன் வந்திருந்த பலர் தற்போது பூந்தோட்டம் பகுதியில் தங்கியுள்ளனர்.

இவ்வாறு தங்கியுள்ள பலர் இராணுவத்தினரின் தாக்குதல்களுக்கு உள்ளானதாகத் தெரிவிக்கப்பட்டது.

மேலும் கொழும்பிலிருந்து யாழ்தேவிமூலம் வடபகுதிக்கு வர முயற்சித்த தமிழ்ப்பயணிகள் பலர் வவுனியா அகதி முகாம் ஒன்றில் தஞ்சமடைந்திருப்பதாக அறியபபடுகிறது. (தி)

---

வங்கிஊழியர்

வயது) என்பவர் கடந்த ஞாயிறன்று சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு 9.00 மணியளவில் ரெலோவினரால் சுடப்பட்ட இவர் இலங்கை வங்கி உத்தியோகத்தராவர். கடந்த அக்டோபர் மாத முற்பகுதியில் ஆரையம்பதியிலும் வங்கிஊழியர் ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டமை தெரிந்ததே:

---

நூல்கள்

கொள்வனவுகளுக்கான பணமாக வழங்கப்படுகின்றது.

மாநகரசபை, நகர சபை பிரதேச சபைகள் ஈழத்து எழுத்தாளர்களின் நூல்களையே கொள்வனவு செய்ய வேண்டும் என்றும், ஒவ்வொரு நூல்களிலும் இரு பிரதிகளாவது வாங்கப்பட வேண்டுமென்றும், ஈழத்து எழுத்தாளர்களும், பதிப்பகங்களும் தத்தமது பகுதி மாநகரசபை, நகரசபை, பிரதேச சபைகளுடன் தொடர்பு கொண்டு தமது நூல்களையும், வெளியீடுகளையும் விற்பனை செய்யுமாறும் உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. சுந்தரம் டிவகலாலா கேட்டுக் கொண்டுள்ளார். (24(

---

போக்குவரத்து

தில் பணிபுரிந்து வந்த உத்தியோகஸ்தர்கள், ஊழியர்களுக்கு புதிய நிவாரணம் வழங்கப்படும் திட்டம் ஒன்று நடைமுறைக்கு கொண்டுவரப்பட்டுள்ளது.

இந்த நிவாரணம் வழங்க ஏதுவாக கோண்டாவில் அலுவலகத்தில் இதற்கான விண்ணப்பப் படிவங்கள் வழங்கப்பட்டு வருகிறது. ஊழியர்கள் இந்த படிவத்தைப் பெற்றுக் கொள்ளுமாறுபொதுமுகாமையாளர் தெரிவித்துள்ளார். (லோ)

---

கூட்டுத்தாபனம்

ஊற்றிற்கு மாற்றப்பட்ட அரச ஊழியர்களுக்கு மேற்படி ஒய்வூதியத்திட்டம் பொருத்தப்பாடு உடையதாக கருதப்படும் ஆனால் இந்த ஊழியர்கள் திணைக்களத்தில் கடமை புரியும்போது வழங்கப்பட்ட சம்பளத்திட்டத்தின் அடிப்படையிலேயே ஒய்வூதியம் வழங்கப்படும்; இவ்வாறு செயலக ஒய்வூதிய அலுவலக அதிகாரிகள் தெரிவித்தனர். (க)

---

தென் தமிழீழ

சேர்ந்த நாற்பது பேர் வரையில் இவ்வாறு மதமாற்றம் செய்யப்பட்டிருப்பதாக தெரியவருகின்றது. மதம் மாறுவதற்கு மறுப்புத் தெரிவிப்பவர்கள் ஜிகாத்தினரால் அழைத்துச் செல்லப்படுவதாகவும் பின்னர் இவர்கள் பற்றிய தகவலேதும் கிடைப்பதில்லை எனவும் அறிய வந்துள்ளது.

---

துணிகரமான

தந்தை மீது ஒரு சிப்பாய் கத்தியால் குத்தினாராம்; இவ்வேளை காயம் சிறிது ஏற்பட்ட நிலையில் அச்சமடைந்திருந்த தந்தையை அருகில் இருந்த பற்றைக்குள் தள்ளினார்களாம்.

பின்னர் தனியே அறை ஒன்றில் ஒளித்திருந்த இளம் பெண்ணைத் தேடி இராணுவத்தினர் சென்றபோது பின்கதவு வழியாக ஓடினார்.

இவ்வாறு ஓடிய பெண்ணை நோக்கி இராணுவத்தினர் துப்பாக்கிப்பிரயோகம் மேற்கொண்டபோதிலும் அந்தப் பெண் தப்பித்துக்கொண்டார்.

குறிப்பிட்ட பெண்ணின் தந்தை எஸ். இராசையா என்பவர் இத்தகவலை ஈழநாதம் நிருபரிடம் தெரிவித்தார். (தி

---

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 31ம் இலக்கத்திலுள்ள ''ஈழநாதம்'' பணிமனையில் 1990 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 12 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.